மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து அரசு விதிகளின்படி ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

ஹெலிகாப்டர் சேவை

***28796—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து தேக்கடி, கொடைக்கானல், திருச்செந்தூர் ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு பயணம் செய்ய ஹெலிகாப்டர் சேவை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கு ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்த M/s. Pawan Hanshelicopters Limited, *புது தில்லி நிறுவனத்தின்மூலம் 2012 மார்ச் மாதம் 25 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையில் மதுரையிலிருந்து கொடைக்கானல் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களுக்கு ஹெலிகாப்டர் சுற்றுலா சேவை தற்போது உடனடியாக இயக்க சாத்தியக் கூறுகள் இல்லையென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

2014 பிப்ரவரி 3]

மேலும் மதுரையிலிருந்து தேக்கடி மற்றும் மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்த இத்துறையின்மூலம் தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற 37 துறைகளும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சுற்றுலாத் துறைக்குத் தனிக் கவனம் செலுத்தி ஒரு சிறப்பான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலாச் சுற்று மற்றும் தென்னகச் சுற்றுலாச் சுற்று ஆகிய திட்டங்களின்கீழ் சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பான திட்டத்தைத் தொகுத்து 500 கோடி ரூபாயையும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியதோடு நின்றிருந்தால் மற்ற முதல்வர்களைப் போல் நம் அம்மா அவர்களும் முதலமைச்சராகவே இருந்திருப்பார்கள். ஆனால், நமது முதல்வர் அம்மா அவர்கள் இதற்கும் மேலாக உயர்ந்த சிந்தனையில், முற்போக்கான சிந்தனையில் தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றி எங்கு தெரியப்படுத்த வேண்டுமோ அங்கு தெரிவிப்பதற்காக, லண்டனில் நடைபெற்ற சர்வதேச பயணச் சந்தை (World Travel Mart) மற்றும் ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலாச் சந்தை (International Tourism Fair), ஆகியவற்றில் தமிழகத்தின் சார்பாக சுற்றுலாத் துறை கலந்துகொள்ளச் செய்து, தமிழ்நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய pen drive என்று நாம் சொல்லக்கூடிய அந்தக் குறும்பதிவின் மூலமாக பல நாடுகள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் தெரியப்படுத்தி தமிழகத்திற்கு சிறப்பு செய்தவர் ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் செய்ததன் காரணமாகத்தான் இன்று முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 பிப்ரவரி 3

முற்பகல் 11–35

என் சட்டமன்றத் தொகுதி ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி என்பது இங்கு எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராக 10 ஆண்டுக் காலம் இருந்திருக்கிறார்கள். சிறப்பான திட்டங்களைக் கொடுத்து ஆண்டிப்பட்டி தொகுதியை ஒரு சிறப்பான தொகுதியாக மாற்றி இருக்கிறார்கள். அந்தத் தொகுதியில் கிராமப்புறங்கள் அதிகமாக இருப்பதால் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரிடம் போய் நான் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தேன். அப்பொழுது நான் கேட்டேன், ஏன் சார், எங்கள் அம்மா ஆட்சி இந்த தடவை எப்படி இருக்கிறது என்று கேட்டேன். அவர் சொன்ன வார்த்தை, உண்மையிலேயே எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர் சொன்ன வார்த்தை, “நான் தமிழக முதல்வர் அம்மா அவர்களிடம் 3 முறையும் வேலை பார்த்திருக்கிறேன், ஆனால், இந்தத் தடவை நான் வேலை பார்க்கும்போது அவர்களிடம் நான் கண்ட புதுமை என்னவென்று சொன்னால், சென்ற முறை முதலமைச்சராக இருந்தபோது நாங்கள் சொல்வதை அம்மா அவர்கள் கேட்டுக்கொள்வார்கள், ஆனால், இந்த முறை, மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தவுடனேயே, அம்மாவே ஒவ்வொரு துறையிலும் என்னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டுமென்ற செய்தியை எங்களுக்குச் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Amma is not only Chief Minister but also Chief Secretary”என்று சொன்னவர் அந்தத் துறைச் செயலர். அனைத்துத் துறைகளினுடைய நுணுக்கத்தைப் புரிந்து மக்களுக்கு வேண்டிய திட்டங்களைச் செய்யக் கூடிய ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா. ‘தாய் திட்டம்’ என்பது சிறப்பான திட்டம். குக்கிராமத்திற்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று அம்மா சிந்தனையில் உருவான திட்டம். இப்படி ஒவ்வொரு துறையிலும் சிறப்பான திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை அனுபவிக்காத நபர்கள்கூட அம்மாவினுடைய திறமையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக 20 கிலோ அரிசி வழங்கி சாதனைப் படைத்த ஒப்பற்ற முதல்வர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பல்லாயிரம் ரூபாய்க்கு மேலே இலவசத்

2014 பிப்ரவரி 3]

திட்டங்களை வழங்கி சாதனை படைத்த முதல்வர் தமிழக முதல்வர் அம்மா அவர்கள். ஆகவே, தமிழக மக்கள் அம்மாவினுடைய செயல்பாட்டைப் பாராட்டுகிறார்கள், வணங்குகிறார்கள். நிச்சயமாக நடக்க இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெற்று அம்மா அவர்கள் நல்ல நிலைக்கு வருகின்றபோது ஹெலிகாப்டர் சேவையை மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கும், மதுரையிலிருந்து தேக்கடிக்கும், மதுரையிலிருந்து கொடைக்கானலுக்கும் மற்றும் மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் நிச்சயமாக அம்மா அவர்கள் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தச் செய்தியைக் கூறி, வணங்கி அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

தரம் உயர்த்துதல்

***4127**—**முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, கூகூர், நல்லாடை அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கூகூர் ஊராட்சி, நல்லாடை கிராமத்தில் இயங்கி வருகின்ற அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை அப்பள்ளி இருக்கும் பகுதியில் உள்ள ஆதி திராவிட மக்களின் தேவையை அறிந்து நிதி